முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1559

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.01.2024**, வெள்ளிக்கிழமை

1. மாதவராஜனே அரங்கா வாழ்கவாழ்க
   மண்ணுலகை காக்க வந்த தேசிகா வாழ்கவாழ்க
   பூதலமெங்கும் உன் தர்மம் நிரம்பி நிற்க
   புண்ணியலோகமாகி இந்த உலகம் பாதுகாப்புப் பெறும் எனக்கூறி
2. கூறியே சுப்ரமணியர் யானும்
   கூறிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 20 ம் நாள், 05.01.2024, வெள்ளிக்கிழமை)
   மாறுதலை உலகமெங்கும் நிகழ்த்த வேண்டி
   மண்ணுலகில் என் அவதாரம் புரிந்த அரங்கனே
3. அரங்கனே உன் சக்தி உலகமெல்லாம் அறியப்பட
   உலகோர்க்கு ஞானம் இலகுவாகி
   ஆகியே அரங்கன் நீ தேடுகின்ற
   ஆற்றல்மிக்க ஞானியர்கள் படை
4. படையெல்லாம் இந்த கலியுகத்தில்
   பெருகி பார் உலகமே
   ஞான லோகம் ஆகும்
   பாடிட அரங்கன் உன் சக்தி கொண்டு
5. சக்திகொண்டு இந்த உலகமெங்கும்
   சாற்றிடுவேன் உயர் மாந்தர்களாக உருவாகி
   சித்திமிகு ஞானவான்களாக
   செப்பிடுவேன் பேருலகமெங்கும்
6. சக்தி பெருகி இனிதே
   சாற்றிடுவேன் ஞானிகள் ஆட்சி
   ஞான ஆட்சி அரங்கன் உன் கருணைபட
   ஆற்றல்பட இனிதே நடந்தேறும்

7. ஞான ஆட்சி மலர ஞானிகள் படை பெருக
ஞான தேசிகன் உன் கருணையே அற்புதம் நடத்தும்
ஞான பண்டிதன் யானும் உன்னுள் இருந்து ஆற்றல் புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–